**Best Start Kindergarten Assessment**
**Information for parents and carers**

# ‘பெஸ்ட் ஸ்டார்ட் பாலர் பள்ளி மதிப்பீடு’

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

அன்புடைய பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு,

‘பெஸ்ட் ஸ்டார்ட் பாலர் பள்ளி மதிப்பீ’டானது எமது பள்ளியில் ‘பருவம் 1’ -இல் இடம்பெறும்.

‘பெஸ்ட் ஸ்டார்ட் பாலர் பள்ளி மதிப்பீ’டானது பாலர் பள்ளிக் கல்வியைத் துவங்கும்போது ஒவ்வொரு குழந்தையின் எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை ஆசிரியர்களுக்குக் காண்பிக்க உதவும் மாநிலம் தழுவிய மதிப்பீடு ஆகும். ஒவ்வொரு குழந்தையினதும் கல்வித் தேவைகளுக்கு ஏற்ற மிகச் சிறந்த ஆதரவுதவியாக இருக்கும் வகையில் பாடங்களைத் திட்டமிட ஆசிரியர்களுக்கு இது உதவுகிறது.

பலவகைப்பட்ட அனுபவங்கள், திறன்கள் மற்றும் ஆற்றல்களோடு குழந்தைகள் பாடசாலையில் சேர்கின்றனர். சில குழந்தைகளுக்குப் புத்தகங்கள் பரிச்சயமாகியிருக்கலாம், அவர்களால் எழுத்துக்களை அடையாளம் காண இயலலாம் அல்லது அவர்களால் தமது பெயரை எழுதவோ, அல்லது பத்து வரை இலக்கங்களை எண்ணவோ இயலுமாகலாம், ஆனால் அதே வேளையில் மற்ற சில பிள்ளைகளுக்கு இந்தத் திறன்கள் இல்லாமல் இருக்கலாம்.

ஒரு ஆசிரியர் ஒரு குழந்தையுடன் தனியாக அமர்ந்து அந்தக் குழந்தையினால் என்னவெல்லாம் செய்ய இயலும் என்று மதிப்பிடுவதற்கான வாய்ப்பினை இந்த ‘பெஸ்ட் ஸ்டார்ட் பாலர் பள்ளி மதிப்பீடு’ ஆசிரியர்களுக்கு அளிக்கிறது.

இந்த மதிப்பீடு ஒரு சோதனையல்ல, ஆனால் பள்ளியில் உங்களுடைய பிள்ளையின் படிப்பில் உதவுவதற்குத் தேவைப்படும் பயனுள்ள தகவல்களை இது ஆசிரியர்களுக்கு அளிக்கும். இந்த மதிப்பீட்டிலிருந்து உங்களுடைய பிள்ளையை நீங்கள் விலக்கிக்கொள்ள விரும்பினால், தயவு செய்து பள்ளியுடன் தொடர்புகொள்ளுங்கள்.

‘பெஸ்ட் ஸ்டார்ட் பாலர் பள்ளி மதிப்பீ’ட்டைப் பற்றிய மேலதிகத் தகவல்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தகவல் ஏடு அளிக்கிறது.

‘பெஸ்ட் ஸ்டார்ட் பாலர் பள்ளி மதிப்பீ’ட்டைப் பற்றிய கேள்விகள் எதுவும் உங்களுக்கிருந்தால் தயவு செய்து பள்ளியுடன் தொடர்புகொள்ளுங்கள்.

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

பள்ளியுடன் தொடர்புகொள்வதில் உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் உதவி தேவைப்பட்டால் 131 450 -இல் தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யுடன் தொடர்புகொண்டு உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். மொழிபெயர்த்துரைப்பாளர் பள்ளியை அழைத்து உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக இணைப்பில் இருப்பார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.

அதிபர்